மாவட்ட உரிமையியல் நீதிமன்றம், திருவைகுண்டம்

2026 ம் ஆண்டு ஜனவரி மாதம் 29-ம் நாள் வியாழக்கிழமை

அ.வ.எண்.72/24

வா.சா.1

சாட்சியின் வாக்குமூலம் 1969 ம் ஆண்டின் ஆணையுறுதி சட்டத்தின் வகைமுறைகளின் கீழ் (44 வது சட்டம்) திரு.எம்.ஹரிராமகிருஷ்ணன்,M.A.,M.Phil.,L.L.M., மாவட்ட உரிமையியல் நீதிபதி அவர்களால் ஆணையிட்டு உறுதிகூறி வைக்கப்படுகிறது.

---------------------------------------------------------------

பெயர்: ஆபிரகாம் தனராஜ் தேதி : 29.01.26

வயது : த/பெ : பால்துரை

கிராமம் : தொழில் :

மாவட்டம்:

---------------------------------------------------------------

<u>29.01.26 குறுக்கு விசாரணை</u>

1. பிரதிவாதி என் சித்தப்பா மகள். என் இடத்தில் பிரதிவாதி கட்டிடம் கட்ட வந்ததால் வழக்கு போட்டுள்ளேன். தாவா சொத்து ஆதியில் யாரிடம் இருந்தது என்றால் என் தாத்தா ரத்தினசாமியிடம் இருந்தது. என் தாத்தாவுக்கு வேறு பெயர் உண்டா என்றால் சங்கர நாடார் என்ற ரத்தின சாமி நாடார். அவருக்கு 4 பேர் வாரிசுகள். அவர்கள் பால்துரை , ஜெபமணி, கருத்தகனி மற்றும் துரைராஜ். என் தாத்தாவுக்கு பாத்தியப்பட்ட சொத்துக்கள் அனைத்தும் அவரது வாரிசுகள் 4 பேருக்கும் பாத்தியப்பட்டது என்றால் சரிதான்.

2.நான் பால்ராஜின் மகன். வழக்கு சொத்துக்களை தவிர என் தாத்தாவுக்கு வேறு சொத்துக்கள் உள்ளதா என்றால் ஆம். ஜாயிஸ் பூமணி என் அம்மா. இவ்வழக்கில் 2 தபசில் சொத்துக்கள் காண்பித்துள்ளேன் என்றால் புல எண் 70/6 மட்டும் காண்பித்துள்ளேன். தாவா சொத்துக்களை என் தாத்தா எனக்கு நேரடியாக பாத்தியப்படுத்தி கொடுத்தாரா என்றால் அவரது வாரிசுகளுக்கு பவர் கொடுத்தார். நான் அனுபவித்து வரும் சொத்து கிழமேல் தெருவில் வடக்கு பார்த்து உள்ளது என்றால் சரிதான்.

3.2 ம் தபசில் சொத்து என் இடத்திற்கு நேர் எதிரில் உள்ளது என்றால் சரிதான். என் அம்மா எனக்கு எப்போது நன்கொடை எழுதிக்கொடுத்தார்

HARIRAMAKRISHNAN Digitally signed by HARIRAMAKRISHNAN Date: 2026.01.29 19:21:22 +0530

என்றால் 2014 ல் எழுதிக்கொடுத்தார். 2009 ல் என் அம்மா ஆழ்வார் சார் பதிவாளர் அலுவலகத்தில் எனக்கு நன்கொடை எழுதிக்கொடுத்துள்ளது பொய் என்றால் எனக்கு எழுதிக்கொடுக்கவில்லை என் சகோதரர்களுக்கு தான் 2009 ல் எழுதிக்கொடுத்தார். 1ம் தபசில் சொத்து எனக்கு பாத்தியப்பட்டது என்பதற்கான ஆவணங்களை தாக்கல் செய்துள்ளேனா என்றால் ஆம்.

4.2ம் தபசில் சொத்து எனக்கு பாத்தியப்பட்டது என்பதற்கான ஆவணங்களை தாக்கல் செய்யவில்லை என்றால் சரிதான். அது எனக்கு வாய்மொழியாக கிடைத்தது. 2ம் தபசில் சொத்து என் சித்தப்பா துரைராஜ்க்கு பாத்தியப்பட்டது என்றால் சரியல்ல. என் தாத்தா துரைராஜ்க்கு எந்த சொத்துக்களும் கொடுக்கவில்லையா என்றால் வீடு கொடுத்துள்ளார். அதன் சர்வே எண் தெரியாது. சொத்து விபரத்தில் கதவு எண் 1/53/2 என்று காண்பிக்கப்பட்டுள்ள வீடு என் சித்தப்பா வீடு என்றால் சரியல்ல.

5.கிழமேல் தெருவில் எனக்கு எதிரில் உள்ள இடத்தை நான் எவ்வித ஆவணமும் இல்லாமல் அனுபவித்து வருகிறேன் என்றால் சரியல்ல. என் அம்மா வாய்மொழியாக கொடுத்தது. 2ம் தபசில் சொத்து என் தாத்தா அவரது மகனான துரைராஜ்க்கு பாத்தியப்படுத்தி கொடுத்தது என்றால் சரியல்ல. அதனை நான் எவ்வித ஆவணமும் இல்லாமல் அனுபவித்து வருகிறேன் என்றால் சரியல்ல. துரைராஜ்க்கு ஒரே ஒரு மகன் மட்டும் உள்ளார். 2ம் தபசில் சொத்து துரைராஜ்ன் மகன் ஜான்சனுக்கு பாத்தியப்பட்டு அவருக்கு பின்னிட்டு அவரது மனைவி கோவில்செல்வி அவரது அனுபவத்தில் இருந்து வருகிறது என்றால் சரியல்ல.

6.உரிய ஆவணங்களின் பேரில் 2ம் தபசில் சொத்தினை அனுபவித்து வருகிறார் என்றால் சரியல்ல. பிரதிவாதிக்கும் தாவா வழக்குக்கும் எந்த சம்பந்தமும் இல்லை என்றால் சரியல்ல. 2ம் தபசில் சொத்தின் அனுபவத்தில் இருந்து வரும் கோயில் செல்வியை இவ்வழக்கில் சேர்க்காமல் தேவையில்லாமல் வாதிக்கு எதிராக வழக்கு போட்டுள்ளேன் என்றால் சரியல்ல. சங்கரன் நாடார் என்ற ரத்தின சாமி நாடாருக்கு என் அம்மா நேரடி வாரிசு கிடையாது என்றால் சரிதான்.

HARIRAMAKRISHNAN Digitally signed by HARIRAMAKRISHNAN
Date: 2026.01.29 19:21:26 +0530

7.அதனால் என் அம்மா எழுதிக்கொடுத்த ஏற்பாடு ஆவண எண் 253/2009 செல்லாது என்றால் சரியல்ல. அந்த ஆவணத்தின் அடிப்படையில் நான் 1ம் தபசில் சொத்தினை நான் அனுபவித்து வருவதாக சொல்வதால் அந்த அனுபவம் சட்டப்படி செல்லத்தக்கதல்ல என்றால் சரியல்ல. பிரதிவாதி தாவா வழக்கிற்கு அவசியமில்லாத தரப்பினர் என்றால் சரியல்ல. அதனால் தாவா வழக்கு நிலைக்கத்தக்கதல்ல என்றால் சரியல்ல. சொத்து விபரத்தில் சொல்லியுள்ள எல்கைமால்கள் தவறானவை என்றால் சரியல்ல. தேவையில்லாத தரப்பினரை சேர்த்ததாலும், அவசிய தரப்பினரை சேர்க்காததாலும் தாவா வழக்கு தள்ளுபடி செய்யத்தக்கது என்றால் சரியல்ல.

என்னால் திறந்த நீதிமன்றத்தில் சொல்லப்பட்டு தட்டச்சரால் தட்டச்சு செய்யப்பட்டு சாட்சிக்கு படித்து காண்பிக்கப்பட்டு அவரால் சரி என்று ஒப்புக்கொள்ளப்பட்டது.

HARIRAMAKRISHNAN
Digitally signed by HARIRAMAKRISHNAN
Date: 2026.01.29 19:21:30 +0530

மாவட்ட உரிமையியல் நீதிபதி ,
ஸ்ரீவைகுண்டம்.